பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண். 624 **நாள்: 28.10.2026**

பொதுமக்கள் தங்கள் வீடுகளில் உருவாகும் திடக்கழிவுகளை உருவாகும் இடத்திலேயே மக்கும், மக்காத குப்பைகள் என முறையாக தரம் பிரித்து தூய்மைப் பணியாளர்களிடம் ஒப்படைத்திட வேண்டும்.

மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் வேண்டுகோள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பொதுமக்களுக்கு மக்கும் மக்காத குப்பைகளை முறையாக தரம் பிரித்து வழங்குதல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள அனைத்து குடியிருப்புவாசிகள், வணிக நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் பெருமளவு கழிவு உற்பத்தியாளர்கள் (Bulk Waste Generators) ஆகியோர் **திடக்கழிவு மேலாண்மை விதிகள்,** 2026-இன் படி திடக்கழிவுகளை **உருவாகும் இடத்திலேயே தரம் பிரித்து பெருநகர சென்னை மாநகராட்சியின்** தூய்மைப் பணியாளர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2026-இன் படி, கழிவுகளை பின்வரும் நான்கு வகைகளாகப் பிரித்து வழங்க வேண்டும்:

- **மக்கும் கழிவுகள் (பச்சை நிறக் குப்பைத்தொட்டி):** உணவுக் கழிவுகள், காய்கறி மற்றும் பழத்தோல்கள், பூக்கள் மற்றும் பிற மக்கும் கழிவுகள்.
- **மக்காத கழிவுகள் (நீல நிறக் குப்பைத்தொட்டி):** காகிதம், பிளாஸ்டிக், உலோகம், அட்டைப்பெட்டிகள், துணி மற்றும் மறுசுழற்சி செய்யக்கூடிய பொருட்கள்.
- **சுகாதாரக் கழிவுகள் (சிவப்பு நிறக் குப்பை தொட்டி):** பயன்படுத்தப்பட்ட சானிட்டரி நாப்கின்கள், டயப்பர்கள், பயன்படுத்தப்பட்ட மருத்துவக் கட்டுப் பொருட்கள் போன்றவற்றை பாதுகாப்பாக சுற்றி தனியாக வழங்க வேண்டும்.
- **வீட்டு அபாயகரக் கழிவுகள் / சிறப்பு கவனம் தேவைப்படும் கழிவுகள் (கருப்பு நிறக் குப்பைத்தொட்டி):** பேட்டரிகள், மின் விளக்குகள், டியூப் லைட்கள், மின்னணுக் கழிவுகள், காலாவதியான மருந்துகள், பெயிண்ட் டப்பாக்கள் உள்ளிட்ட அபாயகரக் கழிவுகளை தனியாக ஒப்படைக்க வேண்டும்.

கழிவுகளை உருவாகும் இடத்திலேயே தரம் பிரிப்பது ஒவ்வொரு தனிநபரின் பொறுப்பாகும். இதன்மூலம் மக்கும் கழிவுகளை உரமாக மாற்றவும், மறுசுழற்சி செய்யக்கூடிய பொருட்களை மீட்டெடுக்கவும், குப்பைக் கிடங்குகளுக்கு அனுப்பப்படும் கழிவுகளின்

அளவை குறைக்கவும், சுற்றுச்சூழலை பாதுகாக்கவும், பொதுச் சுகாதாரத்தை மேம்படுத்தவும் முடியும்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் 200 வார்டுகளிலும் வீடுகள்தோறும் தரம் பிரிக்கப்பட்ட கழிவுகளை சேகரிக்க அனைத்து தூய்மைப் பணியாளர்களுக்கும் அறிவுறு தப்பட்டுள்ளது. திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2026-இல் குறிப்பிடப்பட்டுள்ள நான்கு வகை கழிவு தரம் பிரிப்பு முறையை திறம்பட செயல்படுத்தும் வகையில், மாநகராட்சியின் அனைத்து **பேட்டரி மூலம் இயக்கப்படும் கழிவு சேகரிப்பு வாகனங்களிலும்** (Battery Operated Vehicles - BOVs), கழிவுகளின் நான்கு வகைகளையும் தனித்தனியாக சேகரிப்பதற்காக நான்கு வண்ண அடையாளங்களுடன் கூடிய தனித்தனி குப்பை தொட்டிகள் வைக்கப்பட்டுள்ளன.

எனவே, பொதுமக்கள், வணிக நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள், அலுவலகங்கள் மற்றும் பெருமளவு கழிவு உற்பத்தியாளர்கள் அனைவரும் உருவாகும் ஈரக் கழிவுகள் மற்றும் உலர் கழிவுகளை உருவாகும் இடத்திலேயே தரம் பிரித்து, தனித்தனியாக ஒதுக்கப்பட்ட ஈரக் கழிவு மற்றும் உலர் கழிவுகளுக்கான குப்பை தொட்டிகளில் வைத்து, பெருநகர சென்னை மாநகராட்சியின் தூய்மைப் பணியாளர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

மேலும், தங்களது சுகாதாரக் கழிவுகள் மற்றும் வீட்டு அபாயகரமான கழிவுகளைத் தினசரி அடிப்படையில் பாதுகாப்பான முறையில் தூய்மைப் பணியாளர்களிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். குறிப்பாக, சுகாதாரக் கழிவுகளை முறையாகக் காகிதம் அல்லது உரிய உறையால் சுற்றி, பாதுகாப்பாகக் கட்டி ஒப்படைக்க வேண்டும். இதன் மூலம் கழிவுகளைக் கையாளும்போது ஏற்படும் உடல்நலப் பாதிப்புகள் மற்றும் தொற்று அபாயங்களைத் தடுக்க முடியும்.

கழிவுகள் உருவாகும் இடத்திலேயே தரம் பிரித்தல் மற்றும் அறிவியல் முறையிலான திடக்கழிவு மேலாண்மையை ஊக்குவிக்கும் வகையில், பெருநகர சென்னை மாநகராட்சி பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், தகவல்-கல்வி-தொடர்பு (IEC) நடவடிக்கைகள், பள்ளிகள் மற்றும் சமூக அமைப்புகள் மூலம் தொடர்ச்சியான விழிப்புணர்வு பணிகளை மேற்கொண்டு வருகிறது.

தூய்மையான, ஆரோக்கியமான மற்றும் நிலைத்தன்மை வாய்ந்த சென்னையை உருவாக்குவதில் பொதுமக்களின் பங்கு மிகவும் முக்கியமானதாகும். எனவே, அனைத்து பொதுமக்களும் தங்களது வீடுகள், வணிக நிறுவனங்கள் மற்றும் அலுவலகங்களில் தினந்தோறும் உருவாகும் கழிவுகளை **கழிவு உருவாகும் இடத்திலேயே (மூலத்திலேயே) முறையாகத் தரம் பிரித்து**, ஈரக் கழிவுகள் மற்றும் உலர் கழிவுகளை **தனித்தனி வீட்டு**

உபயோகக் குப்பைத் தொட்டிகளில் சேகரித்து, பெருநகர சென்னை மாநகராட்சியின் தூய்மைப் பணியாளர்களிடம் **தனித்தனியாக ஒப்படைத்து**, பெருநகர சென்னை மாநகராட்சியின் தூய்மை மற்றும் சுகாதாரப் பணிகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

திடக்கழிவுகளை உருவாகும் இடத்திலேயே தரம் பிரிக்கத் தவறுதல் அல்லது திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2026 மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் விதிமுறைகளை மீறுதல் ஆகியவை சட்டப்படியான அபராதம் மற்றும் பிற நடவடிக்கைகளுக்கு வழிவகுக்கும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்கண்ட தகவலை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

"திடக்கழிவுகளை உருவாகும் இடத்திலேயே தரம் பிரிப்போம் – தூய்மையான, பசுமையான, ஆரோக்கியமான சென்னையை உருவாக்குவோம்."

செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி.

GREATER CHENNAI CORPORATION

PRESS RELEASE

P.R.No. 623 **Date : 28.10.2026**

Mandatory Source Segregation of Waste under the Solid Waste Management Rules, 2026

Under the directives of the Hon'ble Chief Minister of Tamil Nadu, solid waste management operations are being carried out effectively within the Greater Chennai Corporation areas. Efforts are underway to raise awareness among the public regarding the proper segregation of waste into biodegradable and non-biodegradable categories.

All residents, business establishments, educational institutions, and bulk waste generators within the Greater Chennai Corporation are required, in accordance with the Solid Waste Management Rules, 2026, to segregate solid waste at the source and hand it over to the Greater Chennai Corporation's Conservancy workers.

Every waste generator shall segregate waste into the following four categories before handing it over to the Greater Chennai Corporation:

- **Wet Waste (Green Bin)** – Food and biodegradable waste
- **Dry Waste (Blue Bin)** – Paper, plastic, metal, glass and other recyclables
- **Sanitary Waste (Red Bin)**– Diapers, sanitary napkins and similar waste (wrapped separately)
- **Domestic Hazardous Waste/Special Care waste (Black Bin)** – Batteries, bulbs, e-waste, expired medicines and chemicals

Source segregation is the responsibility of every waste generator. Proper segregation enables scientific processing of waste, enhances recycling and composting, minimizes waste sent to landfills, reduces environmental pollution, and improves public health.

The Greater Chennai Corporation has instructed all conservancy workers across all 200 wards to collect only source-segregated waste through the door-to-door waste collection system. To facilitate compliance with the four-stream waste segregation system prescribed under the Solid Waste Management Rules, 2026, all **Battery Operated Vehicles (BOVs)** have been provided with **four colour-coded Bins** for the collection of different categories of

waste. All residents, commercial establishments, educational institutions, offices and Bulk Waste Generators are requested to hand over only source-segregated waste to the conservancy workers, separately in the designated wet-waste and dry-waste bins. The public is requested to hand over sanitary waste and domestic hazardous waste to the conservancy workers safely on a daily basis. Sanitary waste, in particular, shall be properly wrapped and securely packed before being handed over to the conservancy workers to ensure safe handling and prevent health hazards.

The Greater Chennai Corporation is conducting continuous awareness campaigns across the city through field staff, Information, Education and Communication (IEC) activities, public meetings, schools and community programmes to encourage source segregation and scientific waste management.

The Greater Chennai Corporation requests the wholehearted cooperation of all citizens in maintaining a clean, healthy and sustainable Chennai by practicing source segregation every day.

Failure to segregate waste at source or violation of the Solid Waste Management Rules, 2026 may attract penalties and other action under the applicable provisions of the Rules and the relevant municipal laws.

"Segregate Waste at Source – Keep Chennai Clean, Green and Healthy."

Issued by : Joint Director/Public Relations Officer,
Greater Chennai Corporation